# இடைக்கால நிர்வாகம் எதையும் புலிகள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்

(யாழ்ப்பாணம்)

"இடைக்கால நிர்வாக சபையை விடுதலைப் புலிகள் ஒருபோதும் ஏற்கமாட்டார்கள். மக்களால் தெரிவுசெய்யப்படும் பிரதிநிதிகளே மாகாண சபையில் அங்கம் வகிக்கவேண்டும்."

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

இடைக்கால நிர்வாக சபை அமைக்கவேண்டும் எனக் கொழும்பில் விடுக்கப்பட்ட கோரிக்கை தொடர்பாக நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர்

(8ம் பக்கம் பார்க்க)

பருவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 | சித்திரை: 6 | றம்ழான் பிறை: 22 | இதழ்: 66

யாழ்ப்பாணம் | வியாழக்கிழமை | 19-04-1990

## கணேசநாதன் இன்று யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண சபை பிரதம செயலாளர் திரு. எஸ். கணேசநாதன் இன்று யாழ்ப்பாணம் வருகிறார்.

(8ம் பக்கம் பார்க்க)

## கூட்டம் நடத்துவதற்கு விதிக்கப்பட்ட தடை உத்தரவு நீக்கம்

(கொழும்பு)

பொதுக்கூட்டங்கள் நடத்துவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவு விலக்கிக் கொள்ளப்பட்டு விட்டதாக கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ★இந்திய இராணுவத் தலையீடு-ஆக்கிரமிப்பு சுதந்திரப் போராட்டத்துக்கு எதிராக எழுந்த பெரிய சவால்!

## அன்னை பூபதி அஞ்சலி செய்தியில் பிரபாகரன்

(யாழ்ப்பாணம்)



"இலட்சியத்தால் ஒன்றுபட்டு எழுச்சிகொண்ட மக்களை எந்த ஒரு சக்தியாலும் ஒடுக்கிவிட முடியாது. வரலாற்று ரீதியாகப் பார்க்கும்போது நாம் சந்தித்த நெருக்கடிகளில் மிகவும் பாரதூரமானதென்றால், அதுவும் ஆபத்தானதென்றால் அது இந்திய இராணுவ ஆக்கிரமிப்பு என்றுதான் சொல்லவேண்டும. இந்திய தலையீடானது எமது சுதந்திரப் போராட்டத்திற்கு எதிராக எழுந்த மிகப்பெரிய சவாலாகும்".

இவ்வாறு அன்னை பூபதி நினைவாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன் விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

திரு. பிரபாகரன் விடுத்துள்ள இச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"இன்று நாம் ஒரு மகத்தான தியாகியை, அந்தத் தியாகியின் அற்புதமான அர்ப்பணிப்பை நினைவுகூர்ந்து எமது இதய அஞ்சலியைச் செலுத்தி நிற்கிறோம்.

"எமது புனித விடுதலைப் போராட்டத்தில் வரலாற்றுக் காவியமாகிவிட்ட எமது தியாகிகளில் அன்னைபூபதி ஓர் உன்னத இடத்தைப் பெறுகிறார்

"ஒரு பெண்ணாக, ஒரு தாயாக. ஒரு குடும்பத்தின் தலைவியாக வாழ்ந்து வந்த சாதாரண வாழ்க்கையைத் துறந்து, சாதாரண பற்று உறவுகளைத் துறந்து, தனது சமூகத்தின் சுபீட்சத்திற்காக, தனது இனத்தின் விடுதலை

(-8ம் பக்கம் பார்க்க)

## "அன்னை பூபதியின உண்ணு நோன்பு எமது விடுதலைப்பாதையின் சரித்திரம்"

### விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி

(யாழ்ப்பாணம்)

"எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் தனக்கென ஒரு நிலையான இடத்தைப் பிடித்துக் கொண்ட அன்னை பூபதி, எமது விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பெரும் பங்களிப்பையும், உலகத்திற்கு எடுத்தியம்பிய உன்னத தியாகி".

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி நேற்று வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

எமது பிரதேசத்திற்கே உரிய தனித்தன்மையுடன், தமிழ்த் தேசிய இனத்தின் இறைமையைப் பாதுகாப்பதற்காக நடைபெறும் எமது சுயநிர்ணய உரிமைப் போராட்டமானது நீண்ட பரிணும வரலாற்றைக் கொண்டது.

ஆரம்பத்தில் சாத்வீக வழி

(8ம் பக்கம் பார்க்க)

## 2 1/2 வருடத்திற்கு முன் பலியானவர் வீடுதிரும்பினுர்

(சித்தன்கேணி)

இரண்டரை வருடங்களுக்கு முன்னர் யாழ் நகரில்விடுதலைப் புலிகளுக்கும் இந்தியப்படைக்கும் யுத்தம் ஆரம்பித்த தினம் 'ஷெல்' தாக்குதலுக்கு பலியாகிய ஒருவர் நேற்று திடீரென்று தமது வீட்டிற்கு வந்து மனைவியையும் உறவினர்களையும் பெரும் ஆச்சரியத்திற்குள்ளாக்கினர்.

சுழிபுரத்தை சேர்ந்த பெ. சிவலிங்கம் என்பவரே 2½ வருடத்திற்கு முன் மரணமாகி, நேற்று உயிருடன் திரும்பியவாரவர்.

இச்சம்பவம் தொடர்பாக அவர் தெரிவித்ததாவது:

வியாபாரத்தை மேற்கொள்வதற்காக நான் நண்பர் சுந்தரலிங்கம் என்பவருடன் 87 அக்டோபர் 10-ம் தேதி யாழ். நகருக்கு சென்றேன். யாழ். நகரில் திடீரென இந்திய படையினருக்கும் தமிழீழவிடுதலைப்புலிகளுக்கும் இடையே யுத்தம் மூண்டது.

அப்போது இந்திய படையினரால் ஏவப்பட்ட 'ஷெல்' எனது நண்பருக்கு அருகாமையில் விழுந்தமையால் நண்பர் ஸ்தலத்திலேயே பலியானுர். நான் கைதுசெய்யப்பட்டு திருமலைக்கு கொண்டுசெல்லப்பட்டேன்.

ஆறுமாதங்களுக்கு பின்பு தீவிரமாக விசாரணை செய்துவிட்டு விடுதலை செய்தனர்.

அடையாளஅட்டை இல்லாமையினுல் இங்கு வரமுடியவில்லை. கடிதமூலம் தொடர்பு கொள்ளவும் முடியவில்லை. இதனுல் எனது நண்பர் ஒருவருடன் புல்மோட்டையில் இவ்வளவு நாளும் வசித்து வந்தேன் என்றுர்.

## எரிபொருள் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் எரிபொருளுக்குப் பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

யாழ். நகரில் நேற்று தனியார் விற்பனை நிலையங்களில் ஒரு லீற்றர் பெற்ரேல் முப்பது ரூபா வரை விற்பனை செய்யப்பட்டது.

மண்ணெண்ணெய்க்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், சில விற்பனை நிலையங்களில், மக்கள் கியூவில் நின்று வாங்கிச் சென்றனர்.

# அன்னை பூபதி நினைவாக வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இன்று எழுச்சி பெருவிழா

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தியாகி அன்னை பூபதி எழுச்சிப் பெருவிழா வடக்கு-கிழக்கு பகுதிகள் முழுவதும் இன்று கொண்டாடப்படுகிறது.

ஆங்காங்கே சிவப்பு மஞ்சள் கொடிகள் பறக்கவிடப்பட்டும் வாழை, மகரதோரணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

### கிளிநொச்சியில் பெருவிழா

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி சிற்றூரவைகள் நடத்தும் எழுச்சிப் பெருவிழா கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய அரங்கில் திரு, இ சரவணபவானந்தன் தலைமையில் இன்று மாலை நடைபெறவுள்ளது.

( 8ம் பக்கம் பார்க்க)

## பெயர்ப் பலகைகளில் தமிழுக்கு முக்கியத்துவம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்புப் பகுதியிலுள்ள வியாபார நிலையங்கள் பெயர்ப் பலகைகளில் தமிழ் மொழிக்கு முதலிடம் கொடு

(8-ம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

## மணமகள் தேவை

கனடா பிரஜா உரிமை பெற்ற 5'-10'' உயரமுள்ள செவ்வாய் தோஷமற்ற உயர் குல வேளாள இனத்தைச் சேர்ந்த 29 வயது இந்து வாலிபருக்கு மணப்பெண் தேவை. பெண் படித்தவராகவும், அழகுடையவராகவும், இந்துவாகவும் இருத்தல் வேண்டும். சீதனம் எதிர் பார்க்கப்படும். படம், சாதகக் குறிப்பு, குடும்ப விபரத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 3760 மே/பா ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம்.

(சி 3760)

## விற்பனைக்கு

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காயவிதை நாசிக் சிகப்பு ரகம். வியாபாரிகளுக்கு விசேட சலுகை வழங்கப்படும். கிலோ 375-00 படி கிடைக்கும். பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(சி-3720)


# "மண்ணின் மீட்புக்காக உயிர்த்தியாகம் செய்தார்"

## அன்னை பூபதிக்கு அஞ்சலி

(நெடுந்தீவு)

''மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு எமது போராட்ட வடிவம் மாறுபட்ட வேளையில் உண்ணா நோன்பிருந்து எம் மண் மீட்புக்காய் உயிர் நீத்தவர் அன்னை பூபதி அவர்கள்.''


## தேவை

Fridge வேலை, றீவைண்டிங் வேலை பழக ஆர்வமுள்ளவர்கள் உடன் தேவை. ஒமேகா, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (சி-3765)

## தவறிவிட்டது

அரியாலை மத்திய விளையாட்டுக்கழக ஆண்டுவிழாவின் போது எனது 670631346 V இலக்க அடையாள அட்டை, ரொக்கம் என்பன தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைககவும். சன்மானம் வழங்கப்படும். பெ. நேத்திரகுமாரன் (செல்வம்), மீசாலை வடக்கு, கொடிகாமம். (சி-3772)


இவ்வாறு நெடுந்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் உண்ணா நோன்பிருந்து ஊர்வலமாய் வந்து கூடியிருந்த உண்ணாவிரதிகள், பொதுமக்கள் ஆகியோர் மத்தியில் உரையாற்றும் போது தீவுப் பகுதியின் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் பொறுப்பாளர் திரு. கஸ்ரோ குறிப்பிட்டார்.

கூட்டத்திற்கு அதிபர் திருமதி. மேரி திரேசா பசுபதி தலைமை வகித்தார்கள்.

நெடுந்தீவு மத்தி அருள்மிகு சித்தி விநாயகர் ஆலயம், நெடுந்தீவு கிழக்கு புனித பஜந்திமா ஆலயம் ஆகிய இரண்டு மத ஆலயத்திலும் அதிகாலை ஆறுமணி தொடக்கம் மாலை ஆறுமணி வரையும் அன்னை பூபதிக்கு அஞ்சலி தெரிவிக்கும் முகமாக அடையாள உண்ணா நோன்பு மேற்கொள்ளப்படடிருந்தது.

நெடுந்தீவு கிழக்கு மகளிர் முன்னேற்றச் சங்கம், சென் அன்ரனீஸ் சனசமூகநிலையம், சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் சென் அன்ரனீஸ் ஐக்கிய நாணய சங்கம், நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவு சனசமூக நிலையங்களின் சமாஜம், கொத்தணி அதிபர் பிரிவு ஐக்கிய நாணய சங்கம், ஐக்கியதீப சனசமூக நிலையம், நெடுந்தீவு கிழக்கு சனசமூக நிலையம், நெடுந்தீவு மத்தி கிராம அபிவிருத்தி மன்றம், உதய ஜோதி ஐக்கிய நாணய சங்க, மற்றும் பல பொது ஸ்தாபனங்கள் இந்த உண்ணா நோன்பில் பங்கு கொண்டன.

திரு. கஸ்ரோ தொடர்ந்து உரையாற்றுகையில்; ''எமது போராளிகளின் உயிர்த்தியாகமே எமது மண்ணை மீட்டெடுப்பதற்கான போராட்ட வடிவத்தின் கலங்கரை விளக்கமாகப் பரிணமித்துள்ளது'' என்றார்.

தீவுப்பகுதி விடுதலைப் புலிகளின் மகளிர் படைப் பிரிவைச் சேர்ந்த செல்வி சோபிகா தமது உரையில்; ''போராட்டம் மூலமாக பல இழப்புக்களைச் சந்தித்துள்ள போதிலும், அவை எமது வெற்றிப் பாதைக்கே கொண்டு செல்கின்றது. எம் மக்களுக்கு இழைக்கப்பட்ட துன்பங்களைக் கண்டு மகத்தான போராட்டம் ஒன்றை மேற்கொண்ட அன்னை பூபதி அம்மா உலகத்தில் மகத்தான சாதனையைப் படைத்து விட்டார்'' என்றார்.

அதிபர் திரு. நா. சங்கரப்பிள்ளை, திரு. சிமி. அந்தோனிப்பிள்ளை, புலவர் ஏ. டபிள்யூ அரியநாயகமும் மற்றும் பலர் உரையாற்றினர்.

(133)


# இடமாற்ற அறிவித்தல்

ஆஸ்பத்திரி வீதி, நவீனசந்தை யாழ்ப்பாணம்
3ம் இலக்கத்தில் ரகுநாதன் பதிப்பகத்தில் இயங்கிவந்த
**ஹாஜி அப்பாஸ்சன்**
(பாடசாலை உபகரணங்கள், காகிதாதிகள்,
மொத்த, சில்லறை விற்பனையாளர்கள்)
என்னும் வியாபார ஸ்தாபனம் 20-04-90 வெள்ளிமுதல்
இல. 6, நவீனசந்தை, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணத்தில்
இயங்கும் என்பதை வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(சி 697) எம். ஒ. உவைஸ்

நேற்றைய எமது
# புதிய வெளியீடுகள்

(1) சிரஞ்சீவி ★ பாணுப்பிரியா ★ விஜயசாந்தி
**"பிடிவாதக்காரன்"**
(ஒறிஜினல்)

(2) சரத்பாபு ★ தீபா ★ M. N. நம்பியார்
**"மாயாராணி"**

(3) ரவிச்சந்திரன்—ஜெயலலிதா
**"அன்று கண்ட முகம்"**

KVC **குணம்** வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

(சி 696)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் என்றால் பெற்றுக்கொள்ளப்படும்.

1. மருத்துவப் பேராசிரியர்
2. உடலமைப்பியல் பேராசிரியர்
3. மன நோயியல் பேராசிரியர்
4. அங்கக் கோணல் அறுவை மருத்துவ அறக்கொடைத்தவிசு
5. கழலையியலில் அறக் கொடைத்தவிசு
6. நோயியல்/ஒட்டுண்ணியல்/நுண்ணுயிரியல்/உடற்றொழிலியல்/மகப்பேற்றியலும் மாதர் நோயியலும்)குழந்தை மருத்துவம்/அறுவை மருத்துவம்/சமூக மருத்துவம்/சட்ட மருத்துவம்/மருந்தியல் - விரிவுரையாளர்/சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II
7. உடற்றொழிலியலில் உதவிவிரிவுரையாளர்/தற்காலிக உதவி விரிவுரையாளர்
8. உடலமைப்பியலில்/அறுவை மருத்துவத்தில் தற்காலிக விரிவுரையாளர்

**சம்பள அளவுத்திட்டம்:**

1. பேராசிரியர் தரம் II : ரூபா 12,200 - 6X300 - 14,000/- மாதமொன்றுக்கு
2. சிரேஷ்ட விரிவுரையாளர் : ரூபா 8,000 – 5X250 தரம் II – 9,250/- மாதமொன்றுக்கு
3. விரிவுரையாளர் (மருத்துவம்) : ரூபா 4,500 - 10X200 - 6,500/- மாதமொன்றுக்கு
(மருத்துவ பீடத்தின்விரிவுரையாளர் ஒருவர் முதல் நியமனத்தின் போது மேற்குறித்த சம்பள அளவுத் திட்டத்தில் 4,500/- ரூபாவுக்கு மேலதிகமாக இரண்டு படியில் அதாவது ரூபா 4,900/- இல் வைக்கப்படுதல் வேண்டும்)
4. உதவி விரிவுரையாளர் : ரூபா 3,900/- மாதமொன்றுக்கு (நிலையானது) ஓராண்டு காலத்திற்கு.

பேராசிரியர்களுக்கும் அறக்கொடைத்தவிசுகளுக்கும் **விண்ணப்ப முடிவுத்தேதி: 1990-07-16 ஆகும்.**

**ஏனைய பதவிகளுக்கு: 1990-05-16 ஆகும்.**

விண்ணப்பங்கள் இப்பல்கலைக்கழகத்தின் தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப்பதிவாளரிடமிருந்து பெறக் கூடிய படிவங்களில் செய்யப்படுதல் வேண்டும். பேராசிரியர், அறக் கொடைத்தவிசுப் பதவிகளுக்கு விண்ணப்பப்படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுய முகவரியிட்டு ரூபா 2/- முத்திரை ஒட்டப்பட்ட 23X10 சதம மீற்றர் அளவுடைய கடித உறையும் ஏனைய பதவிகளுக்கு சுய முகவரியிட்டு முத்திரை ஒட்டப்பட்ட 23X10 சதம மீற்றர் அளவுடைய கடித உறையும் இணைத்து அனுப்பப்படவேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.


தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களின் சிறப்புத் தகைமைகளையும்/அல்லது அனுபவத்தையும் கவனத்தில் கொண்டு சம்பள அளவுத்திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

குறிப்பு: அறக்கொடைத்தவிசு பதவிகளுக்கும் பேராசிரியர் பதவிகளுக்கும் ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் கவனிக்கப்படும்.

**பதிவாளர்.**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். 1990-04-11. (எ-695)

# அன்னை பூபதிக்கு அஞ்சலி



**அன்னை பூபதி நீ ஒரு வாடாமலர்
என்றும் எம்நெஞ்சங்களில் நிறைந்திருப்பாய்!**

"தமிழீழத் தாயின் மகிமைக்காக
உன் வயிற்றைக்காய வைத்தாய்
இனிய தமிழின் பெருமைக்காக
உன் உயிரை உவந்து அளித்தாய்
தாயக மீட்புக்கு நீயொரு
ஓங்கி வளரும் ஆலமரம் அதன்
உயரிய வளர்ச்சிக்கு நீயொரு
ஆழ்ந்து படரும் அறுகம்புல்"

**மாதகல் இளைஞர் சங்கமும்**
**மாதகல் விவசாயிகள் கழகமும்.**
மாதகல்.

(சி 3769)

# தேனிசை செல்லப்பாவின் எழுச்சிமிகு பாடல்கள்

## யாழ். முற்றவெளி மைதானம் 23-ல் களைகட்டப்போகிறது

(யாழ்ப்பாணம்)

தமிழகத்திலிருந்து 'தேனிசை செல்லப்பா' குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு வருகைதர இருக்கிறார்கள். இவர்களுடைய இசை நிகழ்ச்சி இம்மாதம் 23-ம் திகதி [திங்கள்] யாழ். முற்றவெளி மைதானத்தில் இடம்பெற இருக்கின்றது.



தமிழீழ எழுச்சிப்பாடலுக்கு இவர் தாமே இசையமைத்து பாடியிருக்கின்றார். ''நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்'', ''மறவர்படைதான் தமிழ்ப்படை'' போன்ற பல்வேறு எழுச்சிப்பாடல்கள் பாடியவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

1979 ம் ஆண்டு தமிழீழப் போராட்டத்தில் விடுதலைப் புலிகளை தமிழகத்தில் பட்டி தொட்டி எங்கும் அறிமுகப் படுத்திய திரு. செல்லப்பா முழு நேரத்தையும் தமிழீழ விடுதலைக்காக அர்ப்பணித்தவர்.

தமிழீழ விடுதலைப் புலிகளோடு தொடர்பு உள்ளதென அறிந்த 'தூர்தர்சன்' மற்றும் இந்திய வானொலி போன்ற இந்திய வெகுஜன சாதன அமைப்புகளால் புறக்கணிப்புக்குள்ளாகியவர் இவர்.

இவருடைய இரண்டாவது நிகழ்ச்சி 24-ம் திகதி புங்குடுதீவு மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற ஏற்பாடாகி வருகின்றன. வடகிழக்கு எட்டு மாவட்டங்களிலும் மாவட்டத்துக்கு இரண்டு நிகழ்ச்சிகள் வீதம் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் கலாசாரப் பிரிவினர் கருத்து வெளியிட்டனர்.

யாழ். முற்றவெளியில் நடக்கும் இந்நிகழ்ச்சிக்கு பிரவேசக் கட்டணம் ரூபா ஒன்று அறவிடப்படுவதோடு, நிகழ்ச்சி முடிந்தவுடன் நிகழ்ச்சிககு வந்தவர்கள் வீடு செல்வதற்கு போக்குவரத்து ஒழுங்குகளும் செய்யப்பட இருக்கின்றன,

1983-ம் ஆண்டு மே மாதத்துக்குப் பின்னர் யாழ். முற்றவெளியில் முதன்முறையாக நடைபெறும் நிகழ்ச்சியாக தேனிசை செல்லப்பாவின் நிகழ்ச்சி நடைபெற இருப்பது குறிப்பிடத்தக்கது. (152)

# "அன்னை பூபதியின் தியாகம் காவியமாக வேண்டும்!"

**- டொமினிக்**

(நாவற்குழி)

''தமிழீழ விடுதலைப் புலிகளின் பெயரைச் சொன்னலே சுட்டுப்போடுகின்ற இந்திய இராணுவத்தினரும், சமூக விரோத கும்பலும் அடாவடித்தனம் புரிந்த காலகட்டத்தில் இந்திய இராணுவம் யுத்த நிறுத்தம் செய்ய வேண்டும் எனவும், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை நடாத்த வேண்டுமெனவும் எங்கள்பெயரைச் சொல்லி உண்ணாவிரதமிருந்து போர்தொடுத்தவர் அன்னை பூபதி.''

இவ்வாறு அன்னை பூபதி நினைவாக நாவற்குழி மகாவித்தியாலய முன்றலில் நடைபெற்ற உண்ணாவிரதத்தை முடித்து வைத்துப் பேசிய தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ஸ்ரான்லி டொமினிக் கூறினார்.

இளைப்பாறிய ஆசிரியர் திரு. எஸ். தில்லைநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. டொமினிக் தொடர்ந்து பேசுகையில், ''திருகோணமலையில் டேவிட் அன்னம்மா இடைநிறுத்திய உண்ணாவிரதத்தைச் சுட்டிக்காட்டி அன்னை பூபதி உண்ணாவிரதமிருந்தார். அன்னை பூபதியின் உண்ணாவிரதம் ஒரு காவியமாக எழுதப்பட வேண்டும். இந்தியப்படை எமது ஆயுதத்தை கேட்டபோது நாம் சில ஆயுதங்களைக் கொடுத்தோம். அதை வைத்துக்கொண்டு எமது ஆயுதம் முழுவதையும் களைந்துவிட்டோம் என்ற நினைவில் நாம் சிங்களக் குடியேற்றம்பற்றிக் கேட்டபோது எம்மை உதாசீனம் செய்தது. அதனுல் தமிழ்மக்களின் பாதுகாப்பிற்காக நாம் யுத்தத்தை மேற்கொண்டோம்'' என்ருர்.

தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு. பாப்பா பேசுகையில், ''இன்று கிராமம் கிராமமாக நடைபெறுகின்ற உண்ணாவிரதத்தை உற்று நோக்கும்போது விடுதலை உணர்வு ஒவ்வொருவரிடமுமிருந்து வெளிப்படுத்துகின்றதைக் காணலாம்'' என்ருர்.

பண்டிதர் சு. வேலுப்பிள்ளை பேசுகையில்; எமது நாட்டில் நடந்த அகிம்சைப் போராட்டத்தை இந்தியா உணரவில்லையானுல் வேறுயார் இதை உணருவார்கள்? அவர்கள் உணராதபடியால்தான் எமது விடுதலைப்புலிகள் அவர்களுக்கு எதிராகத் துப்பாக்கி ஏந்திஞர்கள். தியாகி திலீபனின் ஊர்வல அணியைப் பார்த்தபோதாவது இந்திய இராணு

(8-ம் பக்கம் பார்க்க)

# ஆனைக்கோட்டையில் நடந்த உண்ணாவிரதம்

[ஆனைக்கோட்டை]

உண்ணாநோன்பிருந்து உயிர்த்தியாகம்செய்த அன்னை பூபதியின் தியாகத்துக்காக நேற்றுமுன்தினம் காலை முதல் மாலைவரை ஆனைக்கோட்டை மக்கள் ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலய முன்றலில் உண்ணாவிரதமிருந்தார்கள்.

இப்பகுதி விடுதலைப் புலிகள் இயக்க பிரதேசப் பொறுப்பாளர் திரு. சங்கரும் இதில்

(8ம் பக்கம் பார்க்க)

## றமழான் சிந்தனை

### உணர்வூட்டும் உபதேசங்கள்

அண்ணல் நபி [ஸல்] அவர்கள், ஹஜ்ரத் அலி[ரலி] அவர்களுக்கு அருளிய அரிய உபதேசங்கள்.

★ ஏ, அலியே! நீர் காலையிலும், மாலையிலும், இஷாத் தொழுகைக்கு முன்னும், இருள் சூழ்ந்த இல்லத்திலும் தூங்காதீர்.

★ இடது கரத்தால் உண்ணவும், குடிக்கவும் செய்யாதீர்.

★ கன்னத்தில் கைவைத்து உட்காராதீர்.

★ பற்களைக் குத்தி அதிலுள்ளவற்றை உட்கொள்ளாதீர்.

★ விரல்களை நெட்டி [சொடக்கு] விடாதீர்.

★ மலம், சலத்தில் எச்சில் உமிழாதீர்.

★ நின்றவண்ணம் கால் சட்டையை அணியாதீர்.

### நோன்பு தொழுகை நேர அட்டவணை

| | |
|---|---|
| ஸஹர் முடிவு | 4-26 |
| சுபஹ் | 4-41 |
| சூரிய உதயம் | 6-01 |
| லுஹர் | 12-20 |
| அஸர் | 3-20 |
| மஃரிப் | 6-19 |
| இஷா | 7-39 |


# அன்னை பூபதிக்கு எங்கள் இதய அஞ்சலி



★ தமிழீழ மக்கள் நலனுக்காக இன்னுயிரை அர்ப்பணித்த அன்னையே!

★ தமிழன் தன்மானம் காக்க உண்ணு நோன்பிருந்து உயிர் துறந்த தியாகதீபமே!

★ தாயகத்தின் மண்காக்க அகிம்சை வழிநின்று தியாக வேள்வியில் புடம்போட்ட தங்கத் தாயே!

★ கிழக்கிலங்கையில் பிறந்தாலும் ஈழத்தமிழர் நெஞ்சமெல்லாம் நிறைந்து விட்ட தியாகத் தாயே!

ஈழத் தமிழர் வரலாற்றில் உன் தியாகச் செய்தி பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும்.

பண்டத்தரிப்பு வர்த்தகர்களும்,
பண்டத்தரிப்பு வர்த்தகர் சங்கமும்.
பண்டத்தரிப்பு.

(ஜ-3770)

### பணிவாக்கு

''வெட்டுண்ட மரம் மீண்டும் தழைக்கும். சந்திரன் கலை தேய்ந்தும் வளரும், நல்லவர்கள் துன்பங்களைக் கண்டு வருந்துவதில்லை.''

—பர்த்ருஹரி நீதி

## நமது நோக்கு

### தியாகத் தீபங்கள்!

அன்னை பூபதியின் நினைவு இன்று எல்லா மக்களினதும் உள்ளங்களிலும் நன்கு பதிந்துவிட்டது.

அன்னையார் ஆற்றிய தியாகம் அளப்பரியது; உலகெங்கும் வியந்து போற்றும் உயிர்த்தியாகம்!

நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து. முப்பத்தொரு நாட்கள் உண்ணா நோன்பு நோற்று, உயிர் துறந்திருக்கிறார்.

தியாகச் செம்மல் திலீபனின் எதிரொலியாகக் கிழக்கிலே அன்னையாரின் தியாகம், மக்கள் உள்ளத்தை- உணர்வை- கிளர்ந்தெழச் செய்துள்ளது.

ஈழத்தின் உரிமைப் போரிலே இவர்களின் தியாகத்திற்குப் பக்க பலமாக உயிர்நீத்த அனைவருக்கும் நன்றிப் பெருக்கோடு தமிழ்மக்கள் தலைவணங்குகிறார்கள்!

மேஜர் சோதியா உட்பட 24 விடுதலைப் புலிகள் மகளிர் அணியைச் சேர்ந்தவர்கள் நாட்டின் விடுதலைக்காக உயிர் நீத்துள்ளார்கள்.

ஆயிரத்து நானூற்றுக்கு மேற்பட்ட வீரவேங்கைகள் மண்ணுக்காக, மண்மீட்புக்காக, வீரமரணமடைந்ததைத் தமிழ் மக்கள் என்றுமே மறக்கமாட்டார்கள்.

''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந் நன்றி கொன்ற மகற்கு!''

என்கிறார் திருவள்ளுவர்.

இந்தத் தியாகத்தீபங்கள் படைத்துவிட்ட வீரகாவியத்தை தமிழ்மக்கள் நன்றிப் பெருக்கோடு நினைவு கூர்ந்து வருவது, மக்கள் சுதந்திரக்காற்றைச் சுவாசிக்கத் தகுதி பெற்றவர்களாக மாறிவருகிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

பெண்களால் என்ன சாதிக்கமுடியும் என்று கேட்டு வந்தவர்கள் வாயடைத்துப் போகும் வண்ணம் ஆண்களோடு பெண்களும் சரிநிகராக விளங்க வைத்தவர் யார்? அன்னை பூபதியாரே!

உயிர்நீத்துத் தியாகம் செய்து அன்னையார் காட்டிய வழி புனிதமானது; பலருக்கு முன்னோடியாகிவிட்டது.

இன்று பல யுவதிகள் இராணுவம், அரசியல் ஆகியவற்றிலும் தமது பூரண பங்களிப்பைச் செய்து வருகிறார்கள் என்றால் அதற்கு முன்னோடியாகத் தியாகம் புரிந்தவர்களை யார் தான் மறக்க முடியும்? அன்னை பூபதி தமிழ் ஈழத்தின் தாய்; தியாகச் சுடர்.

அவர் ஆற்றிய தியாகம். இங்கே ஓர் புதுயுகத்தைத் தோற்ற உதவியது.

அன்னையாரின் சிந்தனைகளும், இலட்சியங்களும் அனைத்து மக்களுக்கும் நல்ல வழிகாட்டியாக அமைய வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்!

## தாய்மையின் தியாகப் பெருமை!

# வரலாறு படைத்த அன்னை பூபதி

''வலிமை சேர்ப்பது
தாய்முலைப்பாலடா
மானம் சேர்ப்பது
மனைவியின் வார்த்தைகள்''

மகாகவி பாரதியின் அமுத கானம் இன்றும் காதில் வந்து பாய்கிறது.

பால் நினைந்தூட்டி தன் இரத்தத்தை குழந்தைக்கு இலவசமாகவேதானம் செய்து அவனது வாழ்வின் மலர்ச்சிக்காக, எழுச்சிக்காக தன்னையேய்தியாகம்செய்பவள் தாய.

''பத்துமாதம் சுமந்திருந்து பெற்றாள், பகலிரவாய் கண் விழித்தாய், வித்தகனாய் நான் வாழ வைத்தாய், மேதினியில் நான்வாழ வழி அமைத்தாய்''

இப்படியெல்லாம் தாய்மையின் தியாகப் பெருமையை ஆய்ந்தறிந்த கவிஞர்கள், அறிஞர்கள் எத்தனையோ அற்புதக் கவிதைகளை அவ்வப்போது எழுதி வைத்திருக்கின்றார்கள் இப்பொழுதும் தொடர்ந்து எழுதிக் கொண்டுமிருக்கின்றார்கள்.

''தாய்மைக்கு மதிப்பளிக்காத சமுதாயம் ஒரு பண்பாடான சமுதாயமாகக் கருதிட முடியாது'' என்பது சுவாமி விவேகானந்தரின் அமுத மொழி.

இந்தப் பெருமையினை அனுபவ ரீதியாக நாம் கண்டு கொள்ளக் கூடியதாக நமது தமிழ் மண்ணிலும் அவ்வப்போது பலர் தோன்றுகின்றார்கள்.

இவர்களது பெருமைமிக்க வரலாற்று வரிசையில் தமிழீழத்தில் அநியாயத்துக்கெதிரான தனிமனிதப் போராட்டத்தில் தன்னைத்தானே அர்ப்பணித்துக் கொண்டவர் அன்னை பூபதி.

அன்னை பூபதியின் தியாக வரலாற்றை அறியாதவர் தமிழ் மண்ணில் இன்று இருக்க முடியாது என்றே சொல்லலாம்.

தமிழ் மக்கள் படும் கஷ்டங்களை, வேதனைகளை, தொல்லைகளை, துயரங்களை, மனக் குமுறல்களைக் கண்டு நெஞ்சு பொறுக்காது தன்னைத்தானே தியாக்கிக் கொண்டு அணையாத தியாகத் தீயாக அன்னை பூபதி இன்று எல்லோர் நெஞ்சங்களிலும் சுடர்விட்டுக் கொண்டிருக்கின்றார்.

சீதையை சிறைவைக்க இராவணன் புஷ்பக விமானத்தில் கொண்டு சென்றபோது அவனுடன் போராடி சீதையின் விடுதலைக்காக தன்னைத்தானே மாய்த்துக் கொள்கின்றது சடாயு. இதில் கம்பர் எழுதிய கவிதை வரிகள் நினைவுக்கு வருகிறது.

''தன் உயிர்புகழ்க்கு
விற்ற சடாயு''
''உயிரைக் கொடுத்தும்
உனை நான் காப்பேன்''

என்ற தற்காலக் கவிஞனொருவனின் கவிதையும் ஞாபகத்துக்கு வருகிறது.

தமிழ்மக்களின் உயிரைக் காப்பாற்றத் தன் உயிரைக் கொடுத்தவர் அன்னை பூபதி என்றால் அது மிகையாகாது.

ஒருநாள் இரு நாளல்ல ஒரு மாத காலம் அந்த தாய் இந்த தமிழினத்துக்காக உண்ணா விரதமிருந்து ஒப்பற்ற உயிரை மண்ணுக்குத் தந்துவிட்டாள்.

யுத்தத்தை நிறுத்துங்கள், தமிழ் மக்களைக் கொன்று குவியாதீர்கள் என்பதனை இறுதிமூச்சாகக் கொண்டு

**க. கணேசலிங்கம்**

இதற்காக தன்னுள்ளேயே போராடி தன் உயர் வாழ்வை மக்களுக்காக அர்ப்பணித்த அன்னை பூபதியின் நாமம் தமிழ் மண்ணில் என்றும் வாழும். நாட்டின் விடுதலைக்காக மக்கள் நல்வாழ்வுக்காக தமது உயிரைத் துச்சமென மதித்து உயிர்நீத்த வரலாற்றுச் சிறப்புமிக்க பெண்களின் வரிசையில் இவரது பெயரும் இடம்பெறுமென்பதில் ஐயமில்லை.

## இராசி பலன்

**19- 04- 1990**
**வியாழக்கிழமை**

மேடம்: ஆலய தரிசனம், வேலையாள் தொல்லை, வெறுப்பு, தூரத்துச் செய்தி.

இடபம்: பெரியோரைப் பேசுதல், கற்பனை, தொழில் பற்றி யோசனை, சகோதரருக்கு உதவி.

மிதுனம்: உடல் உபாதை, கோபம் வருதல், குடும்ப சுகம், நல்லவர் வருகை.

கடகம்: பிடிவாதம், களவு போதல், வீண்பழி சொல்லல், தேகக் களைப்பு.

சிங்கம்: உற்சாகம், கடின வாக்கு, உழைப்பு, சங்கீதம்.

கன்னி: காரியத் தடை, இறை பக்தி, ஆடம்பரம், வைத்தியம்.

துலாம்: உஷ்ணவியாதி, நிதானப் போக்கு, காரியத்

(8ம் பக்கம் பார்க்க)

## பலதும் பத்தும்

### இவர்கள் வீரம்!

சேர, சோழ, பாண்டியர் காலத் தமிழ் வீரர்கள்பற்றி இலக்கியங்கள் உண்டு. இன்றைய தமிழர் வீரம்பற்றி...?

இலக்கியங்கள் போதாது தான்; ஆனால் புகழாரங்கள் பலவுண்டு.

உதாரணத்திற்கு ஒன்று; டாக்டர் ஸ்டீபன் கோஹன் தற்போது அமெரிக்கப் பல்கலைக்கழகமொன்றின் அரசியற்பேராசிரியர். 1985–87 ல் அமெரிக்காவின் தென்னாசிய அரசியல் விவகாரக்குழு உறுப்பினர்.

அண்மையில் இலங்கைக்கு வந்திருக்கிறார். தமிழர்வீரம் பற்றி அவர் கூறியதென்ன?

''இந்தியாவிலே பிரித்தானியர் ஆட்சி நிலவிய போது, பிரித்தானிய இந்திய இராணுவம் அமைக்கப்பட்டது. அதிலே தமிழ் இராணுவ வீரர்களின் வீரம் பளிச்சிட்டது.

இன்றும் இலங்கை–இந்திய இராணுவத்திற்கெதிரான போர்களில் தமிழர் வீரம் உலகப்புகழ் பெற்றுவிட்டது. இந்திய இராணுவத்தையே அதிர வைத்துவிட்டார்கள்!''

தூங்காமை, கல்வி, துணிவுடைமை ஆகியன அரசியலாருக்கு வேண்டும் என்கிறார் வள்ளுவர்!

விடுதலைப் புலிகளின் புகழுக்கு டாக்டர் கோஹன் கூறும் காரணங்கள் மூன்று: உயர் இலட்சியம், தூண்டல், கல்வி [Ideals, Motivation and Education]

புகழாரங்கள் வரலாற்றுப் பதிவுக்காகத் தொகுக்கப்பட வேண்டாமோ?

**வாணி**

# சமூக அபிவிருத்தியில் பெண்களின் பங்கு

ஆக்கம்: செல்வி வத்சலா சந்தியாபிள்ளை
நாரந்தனை.

ஒரு சமூக அபிவிருத்தியில் நிச்சமாக பெண்கள் பங்கு கொள்ள வேண்டும். குடும்ப வாழ்க்கையில் மட்டும் தங்கள் முழுக் கவனத்தையும் செலுத்தாது, இவ்வாறான சமூக நலன்களிலும் பங்கெடுத்துக் கொள்வது மிகவும் வரவேற்கத்தக்க செயலாகும். ஒரு கிராமத்திலேயே தங்கள் முதல் சேவையை தொடங்கலாம்.

கிராமிய பொருளாதார அபிவிருத்தி என ஆரம்பித்தல்.

அபிவிருத்தி என்றால் என்ன?

இயலாமையிலிருந்தும், ஏழ்மையிலிருந்தும் மக்களை விடுவிப்பதுதான் அபிவிருத்தி என கருதப்படுகிறது.

அபிவிருத்தியை அறியாமல் இருப்பதுதான் வளர்ச்சி ஏற்படாமைக்கு காரணமாகிறது.

### அபிவிருத்தி

(i) மொதுவாகஏற்படுதல்.
(ii) திடீரென ஏற்படுதல்.
(iii) திட்டமிடப்பட்டு ஏற்படுதல்.

திட்டமிடப்பட்டு ஏற்படுகின்ற அபிவிருத்தியே வளர்ச்சிக்கு உறுதுணையாகின்றது.

### திட்டமிடப்படுதல் என்றால்

(1) கீழ்மட்டத்தில் மக்களுக்கு பயன்படக் கூடிய வளங்கள் என்ன என்பதை அறிந்து அவற்றை மக்களுக்கு அறிமுகப்படுத்துதல்.

(2) செல்வத்தையும், வீண் விரயத்தையும் பாதுகாத்தல்.

(3) காலத்தை பிரயோசனமுள்ளதாக பயன்படுத்தல். குறைந்த காலத்தில் கூடிய லாபத்தை பெறுதல்.

### பெண்கள் எவ்வாறு அபிவிருத்தியில் ஈடுபடுதல்:

(1) நெசவு வேலைகளில் ஈடுபடுதல்.

(2) தங்கள் அறிவுக்கேற்ப மற்றவர்களுக்கு கல்வியை வழங்குதல்.

(3) பொதுவான (கிராமிய) அபிவிருத்தியில் எல்லோருடனும் சேர்ந்து ஒத்துழைத்தல்.

(4) தையல் வகுப்புக்கள், சிறுவர் பாடசாலை போன்றவற்றை ஆரம்பித்தல்.

(5) கிராமிய மட்டத்தில் அபிவிருத்தி செய்யக்கூடிய மரவள்ளி போன்றவற்றை அபிவிருத்தி செய்தல்.

### அபிவிருத்தி வேலைகளில் ஈடுபடும்போது இருக்க வேண்டிய பண்புகள்:

(1) சமூகத்தின் தேவை, சூழல் அறிந்து செயற்படல்.

(2) சாதி, மத, பாகுபாடு இன்றி செயற்படல்.

(3) குறைந்த காலத்தில் குறைந்த செலவில் கூடிய வருமானத்தைப் பெறக்கூடிய அபிவிருத்தி வேலைகளில் ஈடுபடல்.

(4) ஒரு சமூகத்தினரே பயன் பெறத்தக்கதாக அபிவிருத்திகள் அமையாது எல்லா சமூகத்தினரும் பயன்பெறத் தக்கதாக அமைதல் வேண்டும்.

### சாதாரண வாழ்க்கையில் நாம் கவனத்தில் கொள்ளவேண்டியவை:

உணவு:- உள்ளூர் உற்பத்தியாக இருப்பது சிறந்தது. (மரவள்ளி போன்றவை)

உடை:- நெசவு செய்யப்பட்ட ஆடைகள்.

வீடு:- வாழக் கூடியதாக விருத்தல் (அடிப்படைத் தன்மைகளிலிருந்து பாதுகாக்கப் படுதல்) உள்ளூர் வளங்களைக் கொண்டே வீடுகளை அமைத்தல்.

சேமிப்பு: வருமானத்திலேயே சேமித்தல். உ+ம்: வருமானத்தில் 10/- என்றாலும் சேமித்தல்.

கல்வி: எழுத, வாசிக்க கூடிய வகையிலாவது மக்களுக்கு உதவுதல்.

சுகாதாரம்: சாதாரணமாக ஒரு வீட்டை நிர்வாகிக்கும் பொறுப்பு பெண்களைச் சார்ந்தது. குடும்பம் சுகாதாரமாக இருந்தால்தான் சூழல் சுகாதாரமாக இருக்கும்.

### வருமானத்தை கூட்டுவதற்கான வழிகள்

(1) வீட்டுத் தோட்டம்

(8ம் பக்கம் பார்க்க)

### பகவான் ஸ்ரீசத்திய சாயிபாபாவின் அருள் மொழி மணிகள்

1. ஒன்றே:
   - குலம் – அது மனிதகுலம்
   - சமயம் – அது அன்பு எனும் சமயம்
   - பாஷை – அது இருதய பாஷை
   - கடவுள் – அவர் எங்கும் நிறைந்தவர்
2. நீ கடவுளின் ஜீவரூபமே! அந்த எல்லாம் வல்ல தகைமை, மகிமை, புகழ் இவற்றின் நினைவால் உன்னை நிரப்பிக் கொள்.
3. கருணை நிறைந்த இருதயம், கடவிளின் ஆலயம்.

# சுகாதார உதவியாளர், தரிப்பாளர் 78 பேர் பதவியேற்பு

(யாழ்ப்பாணம்)

கிராமிய சுகாதார உதவியாளர் 52 பேரும், சுகாதார தரிப்பாளர் 26 பேரும் பயிற்சிநெறியை பூர்த்திசெய்துள்ளார்கள். இவர்கள் வடக்கு கிழக்கிலுள்ள தங்கள் பகுதிகளில் நேற்று 18ம் திகதி புதன்கிழமை கடமையைப் பொறுப்பேற்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான பயிற்சிநெறி ஐக்கிய ராஜ்யத்தின் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவியுடன் நடாத்தப்பட்டது.

கிராமிய சுகாதார உதவியாளர்களாக பயிற்சி பெற்ரேர் விபரம்;

## யாழ்ப்பாணப் பகுதி

என். ரஞ்சினி, த. தயாமணி, ந. சாலேஸ்வரி, சி. சித்திரா, இ. நகுலேஸ்வரி, மா. கிருஸ்ணகுமாரி, கே. கோமலாதேவி, க. கலையரசி, து. விக்னேஸ்வரி, ச. வசந்தாதேவி, அ. கவிதா, த. சிவனேஸ்வரி, க. ஜெயந்தி, ஈ. யோகேஸ்வரி, ரி. யோகேஸ்வரி, பி. சித்திராதேவி, ஏ. சுகதா, எஸ். சியாமளா, என். விமலாம்பிகை, பி. திவ்வியலெட்சுமி, என். சந்திரபவானி, ரி. பரமேஸ்வரி, கே. சிவஞானதேவி, ஜே. எலிசபெத், கே. கனகசூகிர்தா, அ. உதயசந்திரிகா.

கனகு புனிதகுமார், தர்மலிங்கம் சுரேஸ்குமார், கணபதிப்பிள்ளை ஜெகதீசன், சங்கரப்பிள்ளை கோகுலவரதன், பசுபதி காந்தரூபன், சிதம்பரநாதன் அருட்செல்வன், பத்மநாதன் சிவகுமார், கந்தையா தியாகலிங்கம், இராஜதுரை முருகானந்தன், சுப்பிரமணியம் சிவநேசராசன், சீவரெட்ணம் ஜீவராசா, சச்சிதானந்தராசா பாஸ்கரன், ஜெகநாதன் விவேகானந்தன், சிவப்பிரகாசம் குணேசலிங்கம், கந்தப்பு இளங்கோ, வே. முகுந்தன், இ. நந்தகுமார்.

என் சிவகங்கா, ஆர். தயாபதி, கே. கலாநிதி, எம். புஸ்பாதேவி, எஸ். சரஸ்வதி, எஸ் றீற்றா மரியராணி, எம். டெல்சி ஈ. அனீற்ரா, வீ. மஞ்சுளா, வீ. சாந்தகுமாரி, கே. கோமலேஸ்வரி, ஏ. தங்கராணி, கே. கலாவதி, எஸ். உதயகுமாரி.

எஸ். வசந்தராணி, எஸ் கமலாதேவி, ரி. இராயேஸ்வரி, ஏ. பற்றிமா ஜெயந்தி, கே. சந்திரிகா, ரி. மஞ்சுளா.

கணபதிப்பிள்ளை திவாகரன், செய்துல் ஆப்தின் ஆசிம், சின்னையா சுப்பிரமணியம்.

## மன்னார்ப்பகுதி

எஸ். சரஸ்வதிதேவி, ஐ. இராதா பரமேஸ்வரி, ஆர். றெஜிஞ அருள்ஒலி குலாஸ், ரி. மேரிகொலஸ்ரிக்கோ, எஸ். கலாநிதி, எம். விக்கினேஸ்வரி.

சுகாதார தரிசிப்பாளராகப் பயிற்சிபெற்ரேர் விபரம்:

## திருகோணமலைப் பகுதி

அப்துல் மஜீட் சாகீர், செல்லத்துரை உதயசீலன், மாணிக்கவாசகர் மோகனக்குமாரன், கணேசலிங்கம் கிருபாகரன். எஸ். எஸ். ஹசன்,

## மட்டக்களப்புப்பகுதி

செல்வராசா ரஞ்சன்

# "நம்பிக்கையான சங்கமானதால் உறுப்பினர் தொகை அதிகரிப்பு"

(உடுவில்)

தற்போது வழங்கப்பட்டு வரும் சகாயத்தைவிட கூடுதலான சகாயத்தை அங்கத்தவர்களுக்கு எதிர்காலத்தில் வழங்குவதற்கேற்ற முறையிலும்உறுப்பினரின் சேமிப்பை அதிகரிக்கும் வகையிலும் தற்போது அங்கத்தவர்களிடமிருந்து அறவிடும் மாதாந்த கட்டணத் தொகையினை முப்பது ரூபாவா அகதிகரிப்பது என்று வடமாகாண ஆசிரியர் சகாய நிதிச் சங்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்ற வடமாகாண ஆசிரியர் சகாயநிதிச் சங்க முப்பதாவது வருடாந்தக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்திற்கு திரு. ப. சண்முகராசா தலைமை வகித்தார். அவர் தமது தலைமையுரையின் போது சகாயநிதியிலும், அதன் நிர்வாகத்தின் மீதும் கொண்ட நம்பிக்கை காரணமாகவும் எமது சங்கத்தில் ஆயிரத்துக்கதிகமான ஆசிரியர்கள் அங்கத்தவர்களாக சேர்ந்துள்ளனர். ஆசிரியர்களுக்கு இளைப்பாற்றுச் சகாயம் மரண சகாயம் போன்றவற்றை எமது சங்கம் மிகக் கூடிய அளவில் வழங்கி வருகின்றது. பாராளுமன்ற நியதிச் சட்டப்பிரகாரம் சட்டபூர்வமான நிதிஸ்தாபனமாக எமது சங்கம் விளங்குவதால் ஆசிரியர் மத்தியில் பெரும் நம்பிக்கையையும், உத்தரவாதத்தையும் கொண்டு இயங்குகின்ரேம் என்ருர்.

# இப்படியும் நடக்கிறது

ஹா ஹ்ஹா...ஹி...ஹி...ஹி. மன்னிக்கவும். உங்களுக்குச் சிரிக்கத்தெரியுமா?

''பொம்பிளை சிரித்தாலும் போச்சு... பொயிலைவிரிச்சாலும் போச்சு'' என்பார்கள். நான் இதனைச் சொல்லவில்லை. சிரிப்பதனுல் பல நோய்கள் தீருகின்றன என்று சுவீடன் நாட்டு டாக்டர் ஒருவர் கண்டு பிடித்திருக்கிருர். அதனைத்தான் உங்களுக்குச் சொல்லவந்தேன்.

டாக்டர் லார்ஸ் ஜுங்டால், ஒரு சுவிடிஷ் டாக்டர். தாம் நடத்திய பரிசோதனைகளில்; சிரிப்பதன் மூலம், சிறுசிறு நோய்களை, குறிப்பாக வலிகளை முற்ருக நீக்க முடியுமென்பது நிரூபிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை செய்தியாளர்களிடம் தமது கண்டுபிடிப்பை வெளியிட்ட மேற்படி டாக்டர்; ''1987ல் ஆறு நோயாளர்கள் மீது பரிசோதனை மேற்கொண்டேன். இவர்கள் அனைவரும் கடுமையான கழுத்து, தோள்மூட்டு வலிகளினுல் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தனர். இவர்களுக்கு பதின்மூன்று வாரகால சிகிச்சை அளித்தேன். சிகிச்சை என்ருல் என்ன தெரியுமா? முழுக்க முழுக்க வாய்விட்டுச் சிரிக்கக்கூடிய துணுக்குகள், சஞ்சிகைகள், திரைப்படங்கள்தான் அவர்களுக்கு அளிக்கப்பட்ட 'மருந்து'கள். முற்ருகவே குணமாகிவிட்டனர்!'' என்று மகிழ்ச்சியுடன் கருத்து வெளியிட்டுள்ளார். 'சிரிப்பே சிறந்த செல்வம்' என்பது அவரது கண்டுபிடிப்பு.

உங்களுக்கும் இதுபோன்ற கழுத்துச் சுளுக்கு அல்லது தோள்மூட்டு வலி ஏற்பட்டால் சும்மா சிரித்துப் பாருங்களேன். சிரிப்பென்ருல் உண்மையான சிரிப்பாக இருக்க வேண்டும். கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் பாடியது போல அதிகாரச் சிரிப்பு ... ஆணவச் சிரிப்பு ... என்று இருந்துவிடக்கூடாது.

'ஊடுருவி'

# குருநகர் இறங்குதுறை அபிவிருத்தி

(யாழ்ப்பாணம்)

குருநகர் இறங்குதுறைப் பகுதியை ஆழமாக்கவும் திருத்துவதற்குமான வேலைத் திட்டங்கள் ஆரம்பமாகவிருக்கின்றன.

யாழ். மாவட்ட அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் யாழ். மாவட்ட கடற்ருெழில் விரிவாக்க அதிகாரி இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிருர். (153)


# மக்கள் வங்கி

## அடகு நகைகள் மீளளித்தல்

பின்வரும் கிளைகளில் அடகு வைக்கப்பட்டு அவற்றை மீளப் பெற்றுக்கொள்வதற்காக பணம் செலுத்தியவர்களது நகைகள் கீழ்க்கண்டவாறு மீளளிக்கப்படும்:

### யாழ். மாவட்டக் கிளைகள்:

வழங்கும் திகதி 1990–04–20 – வெள்ளிக்கிழமை
வழங்கும் இடம்; யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையம்,
(யாழ். கோட்டைக்கு அருகில் அமைந்துள்ளது.)

1. யாழ். பிரதான வீதிக்கிளை, புங்குதீவுக் கிளை } 1989–10–12 திகதிவரை பணம் செலுத்தியவர்களுக்கு.
2. யாழ். நவீன சந்தைக் கிளை - 1989-10-10 திகதி வரை பணம் செலுத்தியவர்களுக்கு.
3. சாவகச்சேரிக் கிளை, பளைக் கிளை } 1989–10-15 வரை பணம் செலுத்தியவர்களுக்கு.
4. யாழ். ஸ்ரான்லி வீதிக்கிளை - 1989–10-15 வரை பணம் செலுத்தியவர்களுக்கு.
5. யாழ். கன்னுதிட்டிக் கிளை, சங்கானைக் கிளை } 1989-10-12 வரை பணம் செலுத்தியவர்களுக்கு.
6. சுன்னுகம் கிளை - 1989–10-11 வரை பணம் செலுத்தியவர்களுக்கு.
7. காங்கேசன்துறைக் கிளை - 1989-10-12 வரை பணம் செலுத்தியவர்களுக்கு.
8. வல்வெட்டித்துறைக் கிளை - 1989-10-18 வரை பணம் செலுத்தியவர்களுக்கு.
9. ஊர்காவற்றுறைக் கிளை - 1989-09-25 வரை பணம் செலுத்தியவர்களுக்கு.
10. பருத்தித்துறைக் கிளை, நெல்லியடிக் கிளை } 1989-09-19 வரை பணம் செலுத்தியவர்களுக்கு.

### கிளிநொச்சி மாவட்டம்:

வ்ழங்கும் இடம்: கிளிநொச்சி தபாற் காரியாலயம்.

| | வழங்கும்திகதி | கிழமை |
|---|---|---|
| 1. பரந்தன் கிளை – (1989-09-28 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 1990-04-20 | வெள்ளி |
| 2. கிளிநொச்சிக் கிளை (1989–06–26 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 1990-04–24 | செவ்வாய் |

### முல்லைத்தீவு மாவட்டம்:

முல்லைத்தீவு கிளை: இக்கிளையில் அடகு வைத்த நகைகளை மீளப் பெறுவதற்காக 1989-09-21 திகதி வரை பணம் செலுத்தியவர்களது நகைகள் முல்லைத்தீவு ஜெசி தியேட்டரில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் விசேட கரும பீடத்தின் ஊடாக மீளளிக்கப்படுகின்றது.

மாங்குளம் கிளை; இக்கிளையில் அடகு வைத்து மீளப் பெறுவதற்காக 1989–10–22 வரை பணம் செலுத்தியவர்களது நகைகள் இம்மாதம் 18ஆந் திகதி முதல் (புதன்கிழமை) மாங்குளம் மக்கள் வங்கியில் வைத்து மீளளிக்கப்படும்.

### வவுனியா மாவட்டம்:

வவுனியாக் கிளை; இக்கிளைக்குரிய 1ஆம் கட்ட நகைகள் வவுனியா பொலிஸ் நிலையத்தில் வைத்து இம்மாதம் 18ஆம் திகதி முதல் மீளளிக்கப்படும்.

### மன்னார் மாவட்டம்:

மன்னுர்க் கிளை: இக்கிளையில் அடகு வைத்து மீளப்பெறுவதற்காக 1989–09–21 வரை பணம் செலுத்தியவர்களது நகைகள் இம்மாதம் 20ஆந் திகதி முதல் மன்னுர் மக்கள் வங்கிக் கிளையில் வைத்து மீளளிக்கப்படும்.

முருங்கன் கிளை: இக்கிளையில் அடகு வைத்து மீளப்பெறுவதற்காக 1989-09-21 வரை பணம் செலுத்தியவர்களது நகைகள் இம்மாதம் 25ஆந் திகதி முதல் (புதன்கிழமை) மன்னுர் மக்கள் வங்கிக் கிளையில் வைத்து மீளளிக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு சம்பந்தப்பட்ட கிளை முகாமையாளருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்ரேம்.

பிராந்திய முகாமையாளர்.

மக்கள் வங்கி,
பிராந்தியத் தலைமையகம்,
யாழ்ப்பாணம்.

(எ 693)

# நினைவு அஞ்சலி

## அஹிம்சையின் சிகரம்

# அன்னை பூபதிக்கு

## எமது கண்ணீர் அஞ்சலி



ஆவியை பணயம் வைத்தே
அருந் தமிழர் மீட்க
பூமியும் நடுங்கி யேங்கப்
புரிந்த நற்றவத்தால் நன்று
காவியம் படைத்த எங்கள் அம்மா
களங்கமில்லாப் பூபதியே
மேவிடும் உந்தன் நாமம்
மேதினி நிலைக்கு மட்டும்!

## லங்கா சீமெந்து நிறுவன தொழிலாளர்கள்,

## காங்கேசன்துறை.

(சி 3766)

## அன்னை பூபதிக்கு

# கண்ணீர் அஞ்சலி

சிவா பிறின்ரேர்ஸ்
கைதடி

தீபன் ஹாட்வெயர்ஸ்
கைதடி

திருவருள் ஸ்ரோர்ஸ்
கைதடி

ஐங்கரன் ஸ்ரோர்ஸ்
கைதடி

ஸ்ரீ கிருஷ்ணா
சைக்கிள் வேக்ஸ்
கைதடி

ஸ்ரீ காந்தா ஸ்ரோர்ஸ்
கைதடி

சிதம்பரன்
சைக்கிள் வேக்ஸ்
கைதடி

ஸ்ரீகணேசா
ஸ்ரோர்ஸ்
கைதடி.

சொரூபிணி
ரேடர்ஸ்
கைதடி.

கைதடி யூனியன்
பேக்கரி

வசந்தாஸ்
லிகர் சொப்
கைதடி



அண்ணல் காந்தியின் அகிம்சை வழிதனில்
தன்னையே கொடுத்து தமிழீழம் அமைக்க
எண்ணிய அன்னையின் இறுதி நாள் தனை
ஏற்றித் துதித்தல் எங்கள் கடமையே!

தமிழீழ விடுதலைப் புலிகளின்
மக்கள் முன்னணி
கைதடி - நாவற்குழி பிரதேசக் கிளை

லீலாவதி
ஸ்ரோர்ஸ்
கைதடி.

சஞ்ஜீவ் கூல்பார்
கைதடி.

## அம்பிகா ஸ்ரோர்ஸ்
கைதடி.

கரன் ரேட் சென்ரர்
கைதடி

சண் பார்மஸி
கைதடி

கைதடி கிறைண்டிங் மில்
கைதடி

லங்கா பில்லிங் ஸ்ரேசன்
கைதடி

கணபதி ரேட் சென்ரர்
கைதடி

ஆரியபவான்
கைதடி

அம்பாள் ஸ்ரோர்ஸ்
கைதடி

(C-3773)

# முறிகண்டிப்பகுதிகொள்ளையர்புலிகளினால்கைது;
# கொள்ளை பொருட்கள்பார்வைக்குவைக்கப்பட்டன

(கிளிநொச்சி)

முருகண்டிப் பகுதியில் 18-ம் போரில் துப்பாக்கிகள் சகிதம் பலகொள்ளைகளை நடத்தி வந்த மூன்று கொள்ளையர்கள் கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களுடன் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் கைது செய்யப்பட்டு நேற்று கிளிநொச்சி பஸ் நிலையத்தில் பொது மக்கள் பார்வைக்காக நிறுத்தப்பட்டனர்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரதிநிதி திரு. செல்வா இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது.

இந்திய ஆக்கிரமிப்புப் படைக்கு எதிராக நாம் ஆயுதம் ஏந்தி போராட்டத்தை நடாத்திய காலத்தில், அவர்கள் எமது தாக்குதலுக்கு ஆளாகி நிலை குலைந்து விட்டுச் சென்ற நாட்களில் சில துப்பாக்கிகளுடன புத்து வெட்டுவானை சேர்ந்த குலசிங்கம் ராஜ்மோகன் வயது 29, சிதம்பரம் ஆனந்தராஜா (வயது 19) மயில்வாகனம் இரவிந்திரகுமார் ஆகியோர் 18-ம் போரில் வேட்டைத் துப்பாக்கிகள் கூரிய ஆயுதங்கள் நவீன ஆயுதங்கள் ரவைகள் சகிதம் இவைகளுடன் 5 பேர் அடங்கிய கொள்ளை கோஷ்டியினர் வாகன சாரதிகளையும் கிளினர்களையும் பிரயாணிகளையும் தாக்கி, அவர்களைத் துன்புறுத்தி இக்கொள்ளைகளை நடாத்தி வந்துள்ளனர்.

இவர்களில் ஒருவர்எம்மிடம் ஏற்கனவே சரணடைந்து அவருக்குப் பொது மன்னிப்பு வழங்கியுள்ளோம் மற்றும் ஒருவர் தலைமறைவாகியுள்ளார். இவரை கண்டுபிடிக்க பொதுமக்கள் உதவவேண்டும் சமூக விரோத துரோகிகள் எவ்வேளையிலும் எமது பார்வையிலிருந்து தப்பமுடியாது என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த மூவரும் நகை, மணிக்கூடு, ரேடியோ, துப்பாக்கிகள், சைக்கிள்கள் முதலான வற்றுடனும்மற்றும் கொள்ளையடிக்கப்பட்ட பணத்தால் வாங்கப்பட்ட மோட்டார் சைக்கிளுடனும் கிளிநொச்சி பஸ்நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்தனர். (83)

---

## இன்றைய பலன்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

தடை, செலவு.

விருச்சிகம்: சுபகாரிய வெற்றி, பணவரவு, தூரத்துச் செய்தி, பிரையாண விருப்பு.

தனுசு: சலிப்படைதல், பெரியவர் உதவி, மறதி, வீண் பழி கேட்டல்.

மகரம்: நன்முயற்சி, சமாதானம். நல்லவர் வருகை, வீண் செலவு.

கும்பம்: உடல் சோர்வு, பிடிவாதம், தொழில் மந்தம்.

மீனம்: சந்தேகம், தொந்தரவு, தூரத்துச்செய்தி, பிதா வழிச் சிந்தனை.

இ. மகாதேவா.

---

## சமூக அபிவிருத்தியில்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்தல்.

(2) தையல் வேலைகளில் ஈடுபடுதல்.

(3) கோழி வளர்ப்பு.

(4) கிடுகு பின்னுதல்.

ஒரு குடும்பத்தை நிர்வகிக்கும் பொறுப்பு பெண்கள் கையிலேயே உள்ளதால் அவர்கள் குடும்ப மட்டத்தில் செய்யும் வேலைகளே கிராமிய மட்டத்திற்கும் பரவுகின்றது. தேவையற்றதாக தங்கள் பொழுதை கழிக்காது பலசுய தொழில்களில் ஈடுபடலாம். சாதாரணமாக வீடுகளில் நடக்கும் கொண்டாட்டங்கள் முக்கியத்துவம் கொடுப்பதன் மூலம் தங்கள் பணத்தை வீண் விரயம் செய்வதுடன், பக்கத்தில் (கிராமத்தில்) இருப்பவர்களையும் இவ்வாறான வழிக்கு வரவைக்கின்றது.

இவ்வாறான செயல்களின் மூலம் பலர் கடனாளிகளானதை நாம் கண்டிருக்கிறோம். இவற்றையெல்லாம் பெண்களே முன்னின்று செய்வதால், அவர்கள் தவறை உணர்ந்தும் தங்கள் கிராம அபிவிருத்தி, சேமிப்பு போன்றவற்றை மனதில் கொண்டும் இவ்வாறான செயல்களிலிருந்து விடுபட்டு வாழலாம்.

பெண்கள்தான், வெளிநாட்டுப் பொருட்களை தேடி அலைவது வழக்கம். உள்ளூர் உற்பத்திகளை இவர்கள் நாடுவது, வாங்குவது குறைவாகவேயுள்ளது. ஆகவே இவர்கள் எம்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

பலவேறுபாடுகள் பார்த்து மக்களை ஒதுக்காது, பாமர மக்கள் மத்தியில் கலந்துரையாடுவதன் மூலம் அவர்களின் அறிவு வளர்ச்சிக்கு உதவலாம்.

கிராமிய அபிவிருத்திக்கு பணம் இரண்டாந்தரமான காரணமாகும். மக்களை தயார் நிலைக்கு கொண்டு வராவிட்டால் எந்த அபிவிருத்தி வேலையையும் செயல்படுத்த முடியாது என்பது தெளிவு.

---

## கணேசநாதன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணசபைபிரதமசெயலாளராகப் பதவியேற்ற பின்னர் முதல் தடவையாக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் திரு. கணேசநாதன், உடனடியாக மேற்கொள்ளவேண்டிய வடக்கு-கிழக்கின் அபிவிருத்தித் திட்டங்கள் சம்பந்தமாக இங்கு முக்கிய ஆலோசனை நடத்துவதுடன், அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடுவார் என்று நம்பப்படுகிறது. (153)

---

## ஆனைக்கோட்டையில்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கலந்து அன்னை பூபதியின் தியாகச் சிறப்பினை எடுத்துக் கூறினார்.

உண்ணாவிரதம் பூர்த்தியான போது சகலருக்கும் குளிர்பானம்வழங்கப்பட்டது. (139)

---

## அன்னை பூபதி

(4ம் பக்கத் தொடர்ச்சி)

வத்தினருக்குப் புரிந்திருக்க வேண்டும். தமிழ் மக்கள் எந்த அளவிற்கு தமிழீழ விடுதலைப் புலிகளில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என. இக்கட்டான கால கட்டங்களில் காடுகளிலும், சந்து பொந்துகளிலும் இருந்து எம்மைக் காப்பாற்றினார்கள்'' என்றார்.

சாவகச்சேரி பிரதேசப் பொறுப்பாளர் திரு. கந்தன் பேசுகையில்; ''திலீபன் எமது இயக்கத்தில் சேரும்போது தமிழீழ மண்ணிற்காக உயிரையும் தியாகம் செய்ய தயங்கமாட்டேன் என்று சத்தியப் பிரமாணம் செய்தே இயக்கத்தில் சேர்ந்தார். ஆனால் அன்னைபூபதி அப்படியான சத்தியப்பிரமாணம் எதுவும் செய்யாமலே எமது மண்ணிற்காக உயிர் நீத்தார்'' என்றார்.

கைதடி, நாவற்குழி பிரதேச அரசியல் பொறுப்பாளர் திரு. அப்பன் நன்றியுரை கூறினார். ஆசிரியர்கள், மாணவர்கள், பெரியோர்கள் உட்பட கட்டம் கட்டமாக நூற்றுக் கணக்கானோர் இவ்வுண்ணாவிரதத்தில் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது. (107)

---

## இடைக்கால

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாநாட்டில் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்; ''மக்களால் நிராகரிக்கப்பட்ட குழுக்களைக் கொண்டு அமைக்கப்படும் எந்த ஒரு நிர்வாக அமைப்பிலும் விடுதலைப் புலிகள் பங்கு பற்றமாட்டார்கள் இவ்வாறான முயற்சிகளையும் விடுதலைப் புலிகள்'' எதிர்ப்பாளர்கள் என்று கூறினார். (சி)

---

## இந்திய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காக அவர் தனது உயிரை அர்ப்பணித்தார்.

''அவரது தியாகம் ஒப்பற்றது. உலக வரலாற்றிலே புதுமையானது.

''இந்திய இராணுவ அடக்குமுறைக்கு எதிராக அவர் தொடுத்த அறப்போர் காந்திய தேசத்தைத் தலைகுனிய வைத்தது. தனிமனிதப் பிறவியாக அவர் சாகவில்லை. தமிழீழத் தாய்க்குலத்தின் எழுச்சி வடிவமாக அவரது தியாகம் உன்னதமடைந்தது.

''அதனால்தான் இன்றைய தினத்தை, அன்னை பூபதியின் இரண்டாவது ஆண்டு தினத்தை, தேசிய எழுச்சி நாளாக, இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் எமது மண்ணிலிருந்து விரட்டப்பட்ட வெற்றி நாளாகக் கொண்டாடுகிறோம்.

''எமது தேசிய விடுதலைப் போராட்டம் எத்தனையோ சோதனைகளைச் சந்தித்து, எத்தனையோ நெருக்கடிகளை எதிர்கொண்டு, எத்தனையோ திருப்புமுனைகளை முகம் கொடுத்து வெற்றிகரமாக முன்னேற்றம் கண்டு வருகிறது. வரலாற்று ரீதியாகப் பார்க்கும் பொழுது நாம் சந்தித்த நெருக்கடிகளில் மிகவும் பாரதூரமானதென்றால், மிகவும் ஆபத்தானதென்றால் அது இந்திய இராணுவ ஆக்கிரமிப்பு என்றுதான் சொல்ல வேண்டும்,

''இந்தியத் தலையீடானது எமது சுதந்திரப் போராட்டத்திற்கு எதிராக எழுந்த மிகப் பெரிய சவாலாக அமைந்தது. முதன் முதலாக எமது போராட்ட வரலாற்றில் ஒரு வல்லரசின் நேரடி இராணுவத் தலையீட்டைச் சந்தித்தோம். ஒரு அந்நிய தேசத்து ஆக்கிரமிப்புப் படையைச் சந்தித்தோம்.

''எமது மண் ஆக்கிரமிக்கப்பட்டபோது, எமது மக்கள் மீது ஒரு முழு அளவிலான யுத்தம் ஏவிவிடப்பட்டபோது, எமக்காகக் குரல் கொடுக்கவோ அல்லது எமக்கு உதவி அளிக்கவோ எந்த ஒரு உலக நாடும் முன்வரவில்லை. உலக வல்லரசுகளும், மூன்றும் உலக நாடுகளும் இந்தியதலையீட்டை ஆதரித்து நின்றன. ஜெயவர்த்தன தலைமையிலான அன்றைய சிங்கள அரசு இந்தியாவுடன் இணைந்து செயற்பட்டது. எமது சகோதர இயக்கங்களும் எட்டப்பர்களாக மாறி இந்தியாவுக்குத் துணைபோயின.

''நாம் தனித்து நின்று இந்தியத் தலையீட்டை எதிர்த்தோம். நாம் தனித்து நின்று உலகின் மிகப்பெரிய இராணுவத்தை எதிர்த்தோம். நாம் தனித்து நின்று எமது தேசிய சுதந்திரத் தீயை அணைய விடாது போராடினோம்.

''இறுதியில் நாம் வெற்றி கண்டோம்.

''இந்த வெற்றிக்குக் காரணம் எமது மனம் தளராத உறுதி, சாவுக்கும் அஞ்சாத எமது வீரம், சத்தியத்திலும் தர்மத்திலும் எமக்குள்ள நம்பிக்கை.

''இந்த வெற்றியானது, தமிழீழ மக்களாகிய உங்களது வெற்றி. உங்கள் குழந்தைகளாகிய எமது போராளிகளின் வெற்றி. உங்கள் இயக்கமாகிய விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வெற்றி.

''இந்திய வல்லாதிக்கம் விடுத்த சவாலை வெற்றி கொண்டு, இன்று எமது விடுதலை இயக்கம் புதிய வரலாற்றுத் திருப்பத்தில் நின்று கொண்டிருக்கிறது மலைபோல மக்கள் சக்தி எமக்குப் பின்னால் இருக்கும்வரை எந்தப் புதிய சவாலையும் நாம் சந்திக்கத் தயார்.

''இன்றைய எழுச்சித் தினத்தில், இந்திய இராணுவ அரக்கனை எதிர்த்துப் போராடி, உயிர் நீத்த எமது தியாகிகளையும், மக்களையும் நினைவில் நிறுத்தி, அவர்களுக்கு எமது வீர அஞ்சலியைச் சொலுத்துவோமாக.''

---

## அன்னை பூபதி உண்ணா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யிலும், எதிரியின் ஆயுத வன்முறையின் முன்பு அகிம்சைப் போராட்டம் தோற்றுப் போக ஆயுதப் போராட்டமாக முதிர்ச்சி பெற்ற வடிவிலும் முன்னெடுக்கப்பட்ட எமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் சிறிதுகாலத்திற்கு முன்புவரை கூட பெண்களின் பங்களிப்பு மிகச் சொற்பவளவாக இருந்துவந்தது.

ஆனால் காலப்போக்கில் இன ஒடுக்குமுறை கூர்மையடைந்து தமிழர்களுக்கெதிரான இழப்புகள் அதிகரிக்க, அதிகரிக்க சமூகத் தளைகளுள் கட்டுண்டிருந்த பெண்களும் அத்தளைகளை உடைத்து வெளியேவந்து எமது தேசிய விடுதலைப் போரினில் பங்கு கொள்ளத்தொடங்கினர்.

இன்று... ஆயிரக்கணக்கான பெண்கள் ஆயுதமேந்திக் களத்தில் இறங்கியுள்ளனர். பல்லாயிரக்கணக்கான பெண்கள் எமது தேசத்தையும், மக்களையும் விடுவிப்பதற்காக தம்மை மனப்பூர்வமாக அர்ப்பணிக்க முன்வந்துள்ளனர்.

எமது தாயகத்தின் விடிவுக்காகத் தன்னுயிரைத்தியாகம் செய்வதன் மூலம், இவர்களுக்கெல்லாம் முன்னுதாரணமாக விளங்கியவர். ஐம்பத்தெட்டு வயதுடைய அன்னையர் திலகம் பூபதி கணபதிப்பிள்ளை.

பாரத தேசத்தின் அதர்மப் போரையும், அவர்களின் கூலிப் படைகள், எம் மக்களுக்கு இழைக்கும் கொடுமைகளையும் நிறுத்துவதற்காக, இரு கோரிக்கைகளைப் பாரத அரசிடம் முன்வைத்து, 32 தினங்கள் உண்ணா நோன்பு இருந்து உருகி உருகியே மாண்டுபோனார் அன்னை பூபதி.

எமது மண்ணில் இறைமையுடன் வாழ்வதற்காக மக்கள் முன்வைத்த கோரிக்கைகள், பாரத அரசினரால் தூக்கி எறியப்பட்டன. எமது தேசம் மக்களுக்காகப் போராடிய உன்னத தேசபக்தரை இழந்தது. இது ஈடு செய்ய முடியாத பேரிழப்பு.

இந்நிகழ்ச்சி, இந்தியாவின் கபடத்தனத்தைக் தோலுரித்துக் காட்டியது. விடுதலைப் புலிகளுக்கு மக்கள் ஆதரவு கிடையாதென்ற இந்திய அரசின் பொய்ப் பிரசாரம் முறியடிக்கப்பட்டு, மக்களே புலிகள் என்பதும், எமது உரிமைப் போராட்டத்தின் தேவையும் மீண்டும் ஒரு தடவை உலக அரங்கில் வெளிக்கொணரப் பட்டன.

அன்னை பூபதி மேற்கொண்ட உண்ணா நோன்பானது ஒரு சாதாரண சம்பவமல்ல; அது ஒரு விடுதலைப் பாதையின் சரித்திரம.

இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான போரின் விளைவாக இன்று இந்திய ஆக்கிரமிப்புப் படை எம் மண்ணிலிருந்து அகற்றப்பட்டுள்ளது. இதன் மூலம் தமிழ்மக்கள் ஆக்கிரமிப்பிற்கு அடிபணியமாட்டார்கள் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தியாக வேள்வியில் உயிர் நீத்த அன்னை பூபதியின் 2ம் ஆண்டு நினைவு நாள் எமது தாயகம் எங்கும் அனுஷ்டிக்கப்படுகின்றது. அன்னையின் தியாகத்தைப் பெருமையுடன் நினைவு கூருகின்றனர் எம் மக்கள்.

இப்புனித நாளில், எமது தாயக விடுதலைக்கான போராட்டத்திற்கு, எமது பூரண பங்களிப்பினை நல்குவோம் என எமது தாயகத்தில் உள்ள அனைத்துப் பெண்களும் உறுதி பூணுவோம். (153)

---

## வடக்கு-கிழக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக கவியரங்கு, பட்டிமன்றம், நடனம், இன்னிசை, வில்லிசை, நாடகம் போன்றவைகள் நடைபெறவுள்ளன.

## நல்லூரில்

யாழ்ப்பாணம் நல்லூரில் இன்று மாலை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் எழுச்சிக்கூட்டம் நடைபெறவுள்ளது.

தீவுப்பகுதி, வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பகுதிகளில் தொடர்ச்சியாக நடைபெற்றுவந்த உண்ணாவிரதமும், அஞ்சலிக் கூட்டங்களும் இன்றும் நடைபெறும்.

இந்த எழுச்சி நாள் கொண்டாட்டங்கள், முல்லைத்தீவு நகரில் மிகப் பெரிய அளவிலான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்ன.

ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, மாங்குளம், துணுக்காய், பாண்டியன்குளம், மல்லாவி ஆகிய நகரப்புறங்களில் பாரிய அளவிலான நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

இந்தப் பெருவிழாவையொட்டி முறிகண்டிப் பிள்ளையார் கண்டி வீதி வழியாகவும், கோணாவில் சந்தியிலிருந்து டிப்போ வீதி வழியாகவும், உருத்திரதரம் பேருந்து நிலயத்திலிருந்து கரடிப்போக்குச் சந்தி கண்டிவீதி வழியாகவும், பரந்தனிலிருந்து கண்டி வீதி வழியாகவும் எழுச்சி ஊர்வலம் நடைபெறும்.

---

## பெயர்ப்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

த்து பெரிய தமிழ் எழுத்துக்களில் பெயர்ப் பலகைகளை வெளியிடுவதென்று தீர்மானித்

---

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு சித்திரை மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.